இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 16.06.2026

# ஒற்றுமையைக் குலைத்தவரே ராகுல் தானே?

ஒற்றுமையைப் பற்றி ராகுல் வகுப்பு எடுத்துள்ளார். இது காலம் கடந்த ஞானோதயம் ஆகும். இந்த ஒற்றுமையை ஒவ்வொரு மாநிலத்திலும் கெடுத்தவரே ராகுல்தானே?

இந்தியா கூட்டணிக் கட்சிக் கூட்டத்தில் தான் ஆற்றிய உரையை ராகுல் காந்தி, சில நாட்கள் கழித்து வெளியிட்டு இருக்கிறார். ஜூன் 8 ஆம் தேதி நடந்த கூட்டத்தில் தான் என்ன பேசினேன் என்பதை ஜூன் 11 ஆம் தேதி வெளியிட்டு இருக்கிறார் ராகுல். இந்தியா கூட்டணிக் கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகள், காங்கிரஸ் மீது வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பொதுவெளியில் அதிகம் பரவியதால் தனது உரையை வெளியிட வேண்டிய நெருக்கடி ராகுலுக்கு ஏற்பட்டுள்ளது.

**எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் ராகுல் எப்படி நடந்து கொண்டார் என்பதை இடதுசாரிகளும், சமாஜ்வாடி கட்சியும், ராஷ்டிரிய ஜனதா தளமும் கடுமையான விமர்சனங்கள் வைத்துள்ளன.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் ஆற்றிய உரை மிக முக்கியமானது. கேரளாவில் காங்கிரஸ் கட்சியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் எதிரெதிராக போட்டியிட்டன. இரண்டும் சம செல்வாக்கு உள்ள கட்சிகள் ஆகும். அவை இரண்டும் நேருக்கு நேராக மோதியதை யாரும் குறை சொல்லவில்லை. ஆனால் ராகுல் காந்தி வைத்த குற்றச்சாட்டு அபத்தமானது. 'பினராயி விஜயனை மோடி ஏன் கைது செய்யவில்லை? இரண்டு பேருக்கும் ரகசிய ஒப்பந்தம் உள்ளது' என்று பேசினார் ராகுல். இதைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான குற்றச்சாட்டாக வைக்கிறது.

**"இடது சாரிகளுக்கும் பா.ஜ.க.வுக்கும் இடையே ஒரு ரகசிய உடன்பாடு இருப்பதாக ராகுல் காந்தி, கேரள மாநில சட்டசபை பரப்புரையின் போது அப்பட்டமான பொய்களைப் பேசினார். இடதுசாரிகளுக்கும் பா.ஜ.க.வுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் இருப்பதாகப் பேசினார். இடது சாரிகளின் பா.ஜ.க. எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு காங்கிரஸிடம் இருந்து சான்றிதழ் தேவையில்லை"** என்று ராகுல் முன்னிலையில் குற்றம் சாட்டினார் மார்க்சிஸ்ட் எம்.பி. ஜான் பிரிட்டாஸ்.

"இடதுசாரிகள் இப்போது இடதுசாரிகளாக இல்லை" என்று ராகுல் சொன்னதைக் குறிப்பிட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா, 'இது ராகுலின் அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகிறது' என்று விமர்சித்தார். 'இல்லை, உண்மைகளின் அடிப்படையில்தான் நான் அப்படிச் சொன்னேன்' என்று குறிப்பிட்ட ராகுல், 'அதானியை கேரளாவுக்கு கொண்டுவந்தது இடதுசாரி அரசே' என்று வாதிட்டார். 'அதானியை கேரளாவுக்கு கொண்டு வந்தது காங்கிரஸ் அரசு தான்' என்று இடதுசாரி அமைப்பினர் பதில் அளித்துள்ளார்கள்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் பேசும் போது, **"இந்தியா கூட்டணியில் இருந்து தி.மு.க. மற்றும் ஆம் ஆத்மி விலகி இருப்பது மிகப் பெரிய பின்னடைவு. இந்தியா கூட்டணி இதே வழியில் தொடர வேண்டுமா என்பது குறித்து தீவிரமாக ஆராய வேண்டும்"** என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

**"பீகார் மாநிலத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்கும் பா.ஜ.க. தலைவர்களுக்கும் இடையே பல பிரச்சினைகளில் ரகசிய உடன்படிக்கைகள் இருந்தனவா என்பது குறித்து எனக்கு சந்தேகம் இருக்கிறது. இது பற்றி காங்கிரஸ் தலைமையிடம் பலமுறை குறிப்பிட்டும் நிலைமையைச் சரி செய்ய அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை"** என்று ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவர் தேஜஸ்வீ சொல்லி இருக்கிறார்.

'பினராயி விஜயனை என்னால் கட்டியணைக்க முடியாது' என்று சொல்லி இருக்கிறார் ராகுல். அவர் தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியைக் கட்டி அணைத்தவர் ஆயிற்றே! அந்தக் காட்சியை மறக்க முடியுமா?

**"யாரும் ராகுல் காந்தியை பினராயி விஜயனை கட்டியணைக்கச் சொல்லவில்லை. மாறாக, பினராயி விஜயன் மற்றும் பிற எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்யக் கோருவதன் மூலம், அவர் அமலாக்கத்துறைக்கும் மோடி அரசுக்கும் ஒரு உதவியாளராகச் செயல்படுவதை நிறுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். அது எதிர்க்கட்சித் தலைவரின் வேலை அல்ல"** என்று மார்க்சிஸ்ட் பொதுச்செயலாளர் பேபி மீண்டும் குற்றம் சாட்டி இருக்கிறார். இதற்கு ராகுலின் பதில் என்ன?

தமிழ்நாட்டில் நடந்த கதை ஊரறிந்தது ஆகும். தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்டே காங்கிரஸ் செய்த கழுத்தறுப்புகள் ராகுல் ஆசீர்வாதத்துடன் செய்யப்பட்டவையே ஆகும். இன்றைக்கு அவர்கள் சேர்ந்துள்ள கட்சியின் தலைவர், 'இந்தியா கூட்டணிக்குள் வர மாட்டேன்' என்று பெப்பே காட்டியதும்தான், ராகுல் காந்தி நல்லபிள்ளை வேஷம் போடுகிறார். 'நான் 100 விழுக்காடு உண்மையாக இருப்பேன். இப்போதே தி.மு.க.வுக்கு உத்தரவாதம் தருகிறேன்' என்கிறார் ராகுல்.

சட்டமன்றத் தேர்தல் நடக்கும் மாநிலங்களில் எல்லாம் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளை ஆட்சிக்கு வர விடாமல் தடுக்க எல்லா கீழ்த்தரமான வேலைகளையும் பார்த்து விட்டு, நாடாளுமன்றத் தேர்தல் வரும் போது, 'புலிக்கு பயந்தவர்கள் என் மேலே படுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்வதைப் போல ஆதரவைத் தேடுவதற்கு வெட்கமாக இல்லையா?

தி.மு.க.வை காங்கிரஸ் நடத்திய விதம் குறித்து அகிலேஷ், தேஜஸ்வீ, உமர் அப்துல்லா, தேசியவாத காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை அனைத்தும் காங்கிரஸ் கட்சி மீது குற்றச்சாட்டுகளை வைத்துள்ளார்கள்.

இதனை ராகுல் எதிர்பார்க்கவில்லை. பா.ஜ.க.வை எதிர்ப்பதற்காகக் கூடிய கூட்டத்தில் காங்கிரஸ் எதிர்ப்புதான் அதிகமாக பேசப்பட்டிருப்பதற்கு பொறுப்பேற்க வேண்டியது ராகுலின் முதிர்ச்சியின்மையும், நேர்மையின்மையுமே காரணம் ஆகும்.

'இந்தியா கூட்டணிக் கட்சிகள் காங்கிரஸ் மீது வைக்கும் விமர்சனங்கள் ஏற்கப்படும்" என்று ராகுல் சொல்லி இருக்கிறார். இவர் இனி விமர்சனங்களை ஏற்றால் என்ன? ஏற்காமல் போனால் என்ன? 'சிவன் விஷத்தைக் குடித்ததைப் போல அனைத்து விமர்சனங்களையும் காங்கிரஸ் விழுங்கிக் கொள்ள வேண்டும்' என்கிறார் ராகுல்.

**அவர் சொல்லும் புராணக் கதைப்படியே பார்த்தாலும் விஷத்தை சிவன் உருவாக்கவில்லை. தேவர்களும், அசுரர்களும்தான் உருவாக்கினார்கள். அமுதம் வேண்டி பாற்கடலைக் கடைந்த போது விஷம் வந்தது. அதனை சிவபெருமான் குடித்தார். ஆனால் 'இந்தியா'க் கூட்டணிக்குள் அமுதமாக இல்லாமல் விஷத்தையே கடைந்தது யார்?**

## முன்னாள் கழகப் பொருளாளர் ஆர்க்காடு நா.வீராசாமியின் பேரன் –

# டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் புதல்வர் வி.கே.சித்தார்த் மணவிழா! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

## மாவட்டச் செயலாளர்கள் – முன்னாள் அமைச்சர்கள் – கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

**சென்னை, ஜூன் 16–**

**முன்னாள் கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களின் பேரன் - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் புதல்வர் வி.கே. சித்தார்த்தின் திருமணம் ஜூன்.17 - புதன்கிழமை அன்று சென்னையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யிலும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.**

**கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.**

**இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-**



முன்னாள் கழகப் பொருளாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான ஆர்க்காடு நா.வீராசாமி - திருமதி. கஸ்தூரி வீராசாமி ஆகியோரின் மகன் வழிப் பேரனும் - வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் - கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி - டாக்டர் ஜெயந்தி கலாநிதி ஆகியோரின் புதல்வருமான வி.கே. சித்தார்த்திற்கும் - சென்னை வாழ் ராமசுப்ரமணியன் சுந்தர் - திருமதி. வித்யா ஸ்ரீசுந்தர் ஆகியோரின் மகளான எஸ். ஆஷ்ரயா காயத்ரிக்கும் திருமணவிழா, நாளை (17.6.2026 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் சென்னை - வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

மணவிழாவில் - மாவட்டக் கழகச் செயலாளர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர், மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், நே.சிற்றரசு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் - மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மணவிழாவிற்குத் தலைமையேற்று, மணவிழாவினை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவில் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி என்.சிவா எம்.பி., ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., மு.பெ.சாமிநாதன், அந்தியூர் ப.செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன்,

மாவட்டக் கழகச் செயலாளர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., மயிலை த.வேலு, தா.மோ.அன்பரசன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., திருமதி பி.கீதா ஜீவன் உள்ளிட்ட கழக மாவட்டச் செயலாளர்களும், முன்னாள் அமைச்சர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களும்,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ். முருகன், துறைமுகம் காஜா, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன், பொன் தனபால் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. நன்றி கூறுகிறார்.

முன்னதாக இன்று (16.6.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.



கரூர் மாவட்டம் தி.மு.க. ஜென்சி கருத்தரங்கம் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின் பேரில் கரூரில் நடைபெற்றது.

# மாமல்லபுரத்தில் அமைச்சர் ஆய்வின்போது ரீல்ஸ் எடுத்த த.வெ.க. நிர்வாகி!

*சென்னை, ஜூன் 16-*

*மாமல்லபுரத்தில் இருந்து சென்னை செல்லும் கிழக்கு கடற்கரை சாலையையொட்டி டி.டி.டி.சி. ஓட்டல் அமைந்துள்ளது. இங்குள்ள 3 கட்டிடங்களில் 24க்கும் மேற்பட்ட தங்கும் அறைகள் உள்ளது. இங்கு ரூ.20 கோடி மதிப்பில் பயணிகள் தங்கும் அறை, வரவேற்பு அறை, கூட்டரங்கு, பார் வசதி மற்றும் சமையலறையுடன் கூடிய நவீன கட்டிடம் கட்டுவதற்காக சில மாதங்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி நடந்து வருகின்றன. இந்நிலையில், புதிய கட்டிடத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் நேற்று ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். தொடர்ந்து, டி.டி.டி.சி. விடுதி மாடியில் உள்ள கூட்டரங்கில் அதிகாரிகளை அழைத்து அமைச்சர் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.*

*அதிகாரிகள் பாதாளச் சாக்கடை, சாலை வசதி, தெருவிளக்கு, போக்குவரத்து இடையூறு, கழிப்பறை மற்றும் குடிநீர்ப் பிரச்சினைகள் குறித்தும், பார்க்கிங் வசதி ஏற்படுத்துவது, சுற்றுலாவை மேம்படுத்த புதிய முயற்சிகள் உள்ளிட்டவைகள் குறித்தும் அமைச்சரிடம் தெரிவித்தனர்.*

*அப்போது, அமைச்சர் ராஜேஷ்குமார் பேசுகையில், மாமல்லபுரத்தை மேம்படுத்த பல்வேறு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதிகாரிகள் தெரிவித்த புகார்களை முதல்வரின் கவனத்திற்கு கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மாமல்லபுரம் டி.டி.டி.சி. விடுதி கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் ராஜேஷ்குமார் பேசிக் கொண்டிருக்கும்போது, த.வெ.க.வை சேர்ந்த பெண் நிர்வாகி ஒருவர் அமைச்சரின் பேச்சை மறிக்கும் வகையில், செல்போனில் சுற்றி சுற்றி ரீல்ஸ் எடுத்துக் கொண்டிருந்தார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.*

## இல.மேகநாதன், சோ.பா.மலர்வண்ணன், அ.பாரிபாலன், ஆர்.துரைராஜ் பங்கேற்பு!

# திருக்குவளையில் சாதனை கலைஞர் தலைப்பில் பேச்சுப் போட்டி!

## மாணவ, மாணவிகளுக்கு என்.கௌதமன் பரிசுகளை வழங்கினார்!

*நாகை, ஜூன் 16-*

*நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்தில் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சாதனை கலைஞர் என்ற தலைப்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி நடைபெற்றது, இந்த பேச்சு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சிக்கு கீழையூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சோ. பா. மலர்வண்ணன் தலைமை தாங்கினார்.*

*தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல்.மேகநாதன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.துரைராசு ஆகியோர் முன்னிலை வைத்தனர்.*

*மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் வரவேற்றார். விழாவில் நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் கலந்து கொண்டு பேச்சுப் போடியில் வெற்றி பெற்ற முதல்பரிசு 10,000 மருதூர் தெற்கு இரா. அருண் குமார்க்கும், இரண்டாம் பரிசு: 7500 தகட்டூர் அகோ. அன்சிகாவிற்கும், மூன்றாம் பரிசு: 5000 தாணிக்கோட்டகம் எஸ். தவ ஆதவனுக்கும்,*

*சிறப்பு பரிசுகள் தலா 2500 கடினல்வயலம. சகானா, மருதூர் தெற்கு கே. சக்திபாலா, திருக்குவளை அ. இளஞ்சேரன், சரபோஜிராஜபுரம் கார்த்திகா,*

*ஆறுதல் பரிசு: 1500 நாகப்பட்டினம் ஆ. சாதனா ஆகியோருக்கு வழங்கியும், கலந்து கொண்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*நிகழ்ச்சியில் விவசாய தொழிலாளர் அணி தலைவர் கோவிந்தசாமி, துணை அமைப்பாளர்கள் லோகநாதன், இராஜேந்திரன், பாலசுப்பிரமணியன், செந்தில்குமார், தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பரமேஸ்வரி, செல்வமுத்துகுமரன், தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆத்மநாதன், ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் மணிகண்டன், பழனிமலைச் செல்வன், கணேஷ் குமார், கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*



நாகை மாவட்டம் திருக்குவளையில் கலைஞர் பிறந்த இல்லத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சாதனை கலைஞர் என்ற தலைப்புகளில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பரிசுகளை வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், கீழையூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ. பாரிபாலன் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஆர்.துரைராஜ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிடோர் உள்ளனர்.